OPEN ACCESS

Manuscript ID: TAM-10032026-10030

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 21.11.2025

Accepted: 25.12.2025

Published: 01.01.2026

Citation: Jetheeswaran, Priyadarshani. "Life Ethics and Psychosomatic Healing Reflected in the Folk Rituals of Eastern Sri Lankan Tamils - Centred on Rituals and Songs." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 20–28.

DOI: https://doi.org/10.34293/tamil.v10i3.10030

*Corresponding Author: priyavasan7@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Life Ethics and Psychosomatic Healing Reflected in the Folk Rituals of Eastern Sri Lankan Tamils - Centred on Rituals and Songs

**Dr. Priyadarshani Jetheeswaran**
*Senior Lecturer, Department of Music*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka*
*http://orcid.org/0009-0007-2694-9942*

**Abstract**

*The long stretch of land situated along the eastern coast of the island of Sri Lanka, bordering the ocean, constitutes the great cultural land known as Batticaloa. With the sea on one side and the Batticaloa Lagoon — a tidal lake — running across the land, this entire region is blessed with beauty and coolness. The livelihoods of the people living here depend largely on marine resources, the lagoon, and agriculture. Likewise, one can observe that their way of life and worship practices are also fundamentally shaped by these very elements. The people of this region hold deep faith in folk ritual worship that falls outside the Agamic tradition. There are numerous male and female deities worshipped by them. It is noteworthy that these ritual practices are rich in dance, song, and sacred chants. The uniqueness of these songs lies in the fact that their content narrates the histories of the deities and temples, while also conveying the way of life of the people, the ethical principles governing their lives, and providing physical and psychological healing. In this study, the life ethics and psychological healing conveyed through their rituals in their daily lives have been examined on the basis of these songs.*

***Keywords:*** *Madai, Kattu Solluthal, Chaattai Pali, Kummi, Paliyaattam, Sadangu.*

## References

1. Ganapathipillai. C, Mahamari Thevi Divya Karani, 1971.
2. Thillainathan. S, Hindu Religious Culture in Batticaloa, Manimegalai Publications, Chennai, 2006.
3. Thillainathan. S, Cultural Traditions of Batticaloa Tamils, Kumaran Book House, Colombo, 2015.
4. Maheswararlingam. K, An Introduction to Minor Deity Worship in Batticaloa, Thillai Publications, Mahiladitheevu, 1996, First Edition.
5. Maheswararlingam. K, Life and Worship in Batticaloa, Colombo Tamil Sangam, Colombo, 2008.
6. Gowriswaran, Lecturer, Department of Fine Arts, Eastern University, Batticaloa, (Age - 42), Interview: 21.07.2020.
7. Chandrakumar. S, Senior Lecturer, Department of Fine Arts, Eastern University, Vantharumoolai, (Age - 45), Interview: 21.07.2020.

# கிழக்கிலங்கைத் தமிழர் கிராமியச் சடங்குகள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளும் உடலுளச்சிகிச்சையும்: சடங்குகளையும் பாடல்களையும் மையப்படுத்தியது

***கலாநிதி பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன்***
முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***முன்னுரை***

*இலங்கைத் தீவின் கிழக்கே இந்த சமுத்திரத்தின் கரையோரமாக அமைந்துள்ள நீண்ட நிலப்பரப்பே மட்டக்களப்பு என்னும் பண்பாட்டுப் பெருநிலமாகும். ஒருபுறம் கடல் அமைந்திருக்க நிலப்பரப்பிற்கு குறுக்காக ஓடிக்கொண்டினுக்கும் மட்டக்களப்பு வாவி என்னும் கடல் நீரேரி, இப்பிரதேசம் முழுவதும் அழகையும் குளிர்ச்சியையும் தருகிறது. இங்கு வாழும் மக்களின் பொருளாதாரம் பெரும்பாலும் கடல் வளத்தையும் வாவியையும் விவசாயத்தையும் நம்பியே காணப்படுகிறது. அதேபோல் அவர்களின் வாழ்வியலும் வழிபாடுகளும் அதனை அடிப்படையாகக்கொண்டே கட்டமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இப்பிரதேசத்து மக்கள், ஆகமம் சாராத கிராமியச் சடங்கு வழிபாட்டில் பெரு நம்பிக்கைகள் கொண்டவர்கள். அவர்களால் வழிபடப்படும் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் பல. இச்சடங்கு வழிபாடு ஆடலும் பாடலும் மந்திரங்களும் நிறைந்ததாகக் காணப்படுவது சிறப்பு. அப்பாடல்களின் பொருள் தெய்வங்களின், கோயில்களின் வரலாறுகளைக் கூறுவதாகவும் மக்களின் வாழ்வியலையும் அம்மக்களின் வாழ்வியலுக்கான நெறிமுறைகளையும் உடல் உள சிகிச்சைகளையும் அளிப்பதாகவும் உள்ளமை அவற்றின் தனித்துவமாகும். இவ் ஆய்விலே அவர்களின் அன்றாட வாழ்க்கையில் அவர்களின் சடங்குகள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளும் உளச்சிகிச்சைகளும் அப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *மடை, கட்டுச் சொல்லுதல், இசாட்டைப் பலி, கும்மி இபலியாட்டம், சடங்கு*

**வாழ்வியல் நெறிகளும் ஆன்மீகக் கருத்துக்களும்**

பொதுவாக மட்டக்கள்ப்பால் நடைபெறும் சடங்கு வழிபாடு தனித்துவமானது. இது மறுமை பற்றி எப்போதும் பேசியது கிடையாது. வாழ்வில் நோய் பிணி துன்பம் அற்ற மகிழ்ச்சியே சடங்கின் அடிநாதமாகும். இறைவனைத் தியானம் யோகம் போன்ற சாதனைகள்மூலம் அடைய நினைப்பவர் மிகக் குறுகிய வீதத்தினரே. சடங்கு வழிபாட்டோடு இணைந்திருப்போர் வருடம் ஒருமுறை தங்கள் வாழக்கைக்குத் தேவையான சக்தியைச் சடங்கிலிருந்து பெறுகின்றனர். அதாவது தம்மைப் புதுப்பித்துக் கொள்கின்றனர். வருடமொருமுறை சடங்கில் தெய்வங்களுக்குப் படையலிட்டு பலி கொடுத்தால் சகல தோய்களும் நீங்கி, நோய் நொடி அற்று மகிழ்ச்சியாக சமூகம் வாழும் என்னும் பெரும் நம்பிக்கையினைச் சடங்கு தருகிறது.

சடங்கில் எந்த அடிப்படை வாதங்களுக்கும் இடமில்லை. இனம், மதம் போன்றவை சடங்குகளுக்குள் வருவதில்லை. அது உலகப் பொது நோக்கு உடையது. மக்கள் சடங்கில்

எந்தப் பாகுபாடும் இன்றி கலந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. ஒரு சடங்கு நடைபெறும்போது அதில் எல்லோரும் பங்கு பற்றுனர்களாகவே இருப்பர். பூசாரி பூசை செய்ய ஏனையோர் தத்தம் கடமைகளில் ஈடுபடுவர். ஆடலும் பாடலும் அனைவரையும் இணைக்கின்றன.

பாடப்படும் சடங்குப் பாடல்கள் சில அறநெறிக் கருத்துக்களையும் ஆன்மீக கருத்துக்களையும் மக்கள் மனதில் விதைத்து செல்கின்றன. பொது நலம் பேணுதல் என்னும் கொள்கையினைப் பாடல்களில் அதிகமாகக் காணலாம். அனேகமாக வாழிப் பாடல்கள் பாடும்போது இதனை நாம் அவதானிக்கலாம்.

***வந்த வெப்புக் கோதாரி நோய்கள் மாற்றி***
***வையகம் எல்லாம் குளிர மகிழ்வதாக***
***சந்ததமாய் உனது மனமிரங்கும் அம்மா***
***தாரணியில் மக்களுக்கு தருமம் தாயே,***
***(ம.தி.க.-ப:45)***

***சீர்வாழி புவிவாழி வேதமுறை வாழி***
***(ம.தி.க.-ப:59)***

***தாரணி எங்கும் தழைத்து மிகவாழி***
***(ம.தி.க.-ப:92)***

சடங்கின் நோக்கமான உலகளாவிய பொது நோக்கைப் பாடல்களில் காணலாம். சடங்குகள் உலகம் பொதுவிற்குமான நன்மைக்காக செய்யப்படுவது. ஒரு நாட்டில் மாரி மழை பொழிந்தால் பஞ்சம் நீங்கும். பசி பட்டினி அகலும். வெற்பு, வைசூரி அம்மை போன்ற வெம்மை நோய்கள் தணியும் என்னும் பொது நோக்குடன் மழை பொழியவும் செந்நெல் விளையுமாறும் வேண்டிப் பாடுமாற்றைக் காணலாம்.

***நீதி செறி மட்டக்களப்பு நகர் வாழி***
***நேசமாய் மாதம் மும்மாரி மழை வாழி***
***மேதினியில் உள்ளவர்கள் யாவரும் வாழி***
***(ம.தி.க-ப:137)***

***வையகத்தில் மானிடர்கள் நோய்பிணி அகற்றியே***
***(ம.தி.க-ப:157)***

***ஏர் வாழி மறை வாழி அடியார்கள் வாழி***
***(ம.தி.க-ப:158)***

பாவங்கள், தவறுகள் செய்தால் தெய்வம் தண்டிக்கும் என்னும் வெளிப்படையான எச்சரிக்கைகளைப் பாடல்களில் காணலாம். அதேநேரம் நாம் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டி இரங்கி வேண்டும் பாடல்களும் காணப்படுகின்றன.

***ஆறு குற்றம் நூறுபிழை சிவமுத்துமாரி தாயார்***
***அடியார்கள் செய்தபிழை சிவமுத்துமாரி அம்மாளே***
***தெரியாமல் செய்த பிழை சிவமுத்துமாரி எங்கள்***
***தேவியரே நீ பொறம்மா சிவமுத்துமாரி,.***
***(ம.தி.க-ப:36)***

மாரியம்மன் காவியதத்தில் வரும் ஒரு பகுதியில் சிவனிடம் அவள் வரம் பெற்ற முத்துக்களை அதாவது அம்மன் நோய்களைப் பூலோகத்தில் நன்மை செய்தவர்களுக்கும் நன்றி உடையவர்களுக்கும் கிழ வயதினருக்கும் சிறு குழவி பாலகர்களுக்கும் நீ முத்தெறிய போகாதே என்றும் சதிகாரர்கள், சண்டாளர்கள், பொல்லாதவர்கள், அவ கேடர்கள், அநியாயம் செய்தோர், வட்டி கொடுப்போர் போன்றவர்களுக்குப் போய் நீ முத்துக்களை எறி எனச் சிவனிடம் கேட்டுக்கொண்டதாகப் பாடல்களில் வருகின்றது. இங்கு செய்த வினைகளுக்கு முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எனும் கூற்றிற்கிணங்க உடனடியாக மாரியம்மன் தண்டிப்பாள் என்னும் எச்சரிக்கையைப் பாடல்களில் காணலாம்.

பொதுவாகச் சடங்குகளின் குறிக்கோள் மூன்று படிகளில் ஆற்றப்படும்.இவை தெய்வங்களை அழைத்தல், கொடுத்தல் வழியனுப்புதல் ஆகும். வருடம் ஒருமுறை தெய்வத்தை அழைத்து அவர்களுக்கு

வேண்டியபலி கொடுத்தல், கோபம்தணிந்து அருள்வாக்குக் கூறி குற்றம் குறைகளைக் கேட்டு ஆகவேண்டியது எதுவோ அதனை நேரடியாக உரையாடி அறிந்து அதற்கான பரிகாரங்களையும் கேட்டறிந்து அவர்களைத் திருப்திப்படுத்தல். பின் தெய்வங்களை சந்தோசமாக மீண்டும் வழி அனுப்பி வைத்தல். இவற்றின் ஊடாகப் பெறப்படும் பயன்கள் இரண்டுதான் நாடு செழித்தல். நோய்தனிலிருந்து காத்தல். இவை இரண்டுமே சடங்கின் அடிநாதமாக விளங்கும் நோக்கங்களாகும். இவைதவிர பாடலின் பொருளில் எந்தக் கருத்துக்களும் வேண்டப்பட்டதாகத் தெரியவில்லை. தெய்வங்களின் வரலாறுகள், அதன் தோற்றம், பராக்கிரமங்கள், கதைகள், புனைவுகள் என்பவையே பாடல்களின் வெளிப்படையான பேசுபொருளாக அதிகபட்சமாகக் காணப்படுவது அவதானிக்கப் பட்டது. ஆனால் பாடல்களின் இசையும் அதனோடு இணைந்த உடுக்கு, பறை, சிலம்பு ஒலியும் வேறு தளத்திற்கு இட்டுச் செல்கின்றன.

மனித வாழ்க்கையின் இருப்பிற்கு இயற்கைச் சமநிலை அவசியமானது என்பதும் இயற்கையைப் பேணவேண்டிய முக்கியத்துவத்தையும்வலியுறுத்துவதாகவும் உயிரினங்கள் அனைத்தையும் காத்தல் வேண்டும் என்று வேண்டுதல் செய்யும் பாடல்களும் காணப்படுகின்றன. ஜந்துக்கள் அனைத்தும் எமக்குத் தீமை செய்யாமல் நிந்தனை செய்யாமல் அவைகளும் வாழ நாமும் வாழ அருள் புரியப்பா என நாகதம்பிரானை வேண்டும் பாடல்கள் காணப்படுகின்றன.

***பொந்திலுறை சிந்து முதல்***
***புடையனொடு விரியன் எனும்***
***பாடலில் நிந்தனைகள் செய்யாமல்***
***எங்கள் துணையாக நிகழட்ட***
***திசை காவல் நீயொழிய உண்டோ***

***(ம.தி.க-ப:149)***

எனக் காணலாம். நாக வணக்கம், வேம்பு, ஆலமரம் போன்ற விருட்சங்கள் என்பவை சடங்கு கோயில் சூழலில் நிறைந்திருப்பதும் வருடம் முழுவதும் பறவைகள் சில பாம்புகள் அங்குக் குடிகொண்டிருப்பதும் உயிர்களின் பல்வகைமை பேணுகையில் சடங்குக் கோயில்கள் முக்கிய இடத்தை வகிப்பதையும் காணலாம்.

### உடலுள ஆற்றுப்படுத்தலும் சிகிச்சையும்

உள ஆற்றுப்படுத்தல் என்பது ஒரு சிக்கலிலிருந்து விடுபடுவதற்கான செயற்பாடாகும். உள நெருக்குதலுக்கு உள்ளான ஒருவனை அவனது இயல்பான இயங்குநிலைக்குக் கொண்டுவருதல் எனப் பொருள் கொள்ளலாம். பாதிப்படைந்த அவன் தன்னை சூழவுள்ள சமூகத்துடன் இயல்பான தொடர்பாடலை பேண முடியாது சிரமப்படுவார். இங்கு அவனை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து சமூகத்திற்கு பயன் தரும் வண்ணம் அவனது திறனை மேம்படுத்தல் ஆற்றுப்படுத்தல் எனப்படும். ஒருவன் நெருக்கடிக்கு ஆளாகும் போது அவனது சிந்தனையும் செயல்பாடும் பாதிக்கப்படுகின்றன. சிந்தனையும் செயல்பாடும் அவனது நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. நடத்தை மாற்றம் சமூகத்திற்கும் அவனுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரித்து விடுகின்றது. சமூக இடைவெளி ஒருவித பதற்றத்தையும் பயத்தையும் ஏற்படுத்தி விடுகிறது.

தற்காலத்தில் சமூகப் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் குடும்பம் என்னும் நிறுவனத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. இத்தகைய பாதிப்புகளின் விளைவு உள நெருக்கடி. இயந்திர வாழ்க்கையில் அதனை தீர்த்துக்கொள்ளவும் வடிகால் தேடவும் முடியாத சூழ்நிலை உளப் பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகின்றது. அன்று இயற்கையோடு வாழ்ந்திருந்த மக்களுக்கு இத்தகைய

நெருக்கடிகள் இல்லை. உழைத்து உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடி கழித்து இயற்கையை நேசித்து தூய்மையான காற்றைச் சுவாசித்து மகிழ்ந்திருந்தான்; தனது சிக்கல்களை தமக்குள்ளேயேத் தீர்த்துக்கொண்டான்; இயற்கையை நம்பி வணங்கினான் அதனால் தனக்கு அனைத்தும் நன்மையே நடக்கும் என நம்பினான். இந்நம்பிக்கை என்னும் திண்மையே சடங்கிற்கு அடிகோலின.

உடற்பிணியாக இருந்தாலும் உளப்பிணியாக இருந்தாலும் இயற்கையிடமே ஒப்புவித்து இயற்கையிலிருந்து கிடைப்பதை வைத்துத் தீர்த்துக்கொண்டான். நோயற்ற வாழ்வும் மகிழ்ச்சியும் மட்டுமே குறிக்கோளாக இருந்தன. இவ்விரு குறிக்கோள்களும் சடங்கில் நிறைவேற்றப்பட்டன.

கடவுள் நம்பிக்கை குணமாக்கலுடன் தொடர்புபடுமாற்றை நோக்கின், இது ஒரு மனிதன் தான் தனக்கும் மேலான ஒரு வல்லமையுடன் இணைக்கப்பட்டுள்ளேன் என்னும் உறுதியான நம்பிக்கையை கொடுக்கும் புனைவேயாகும். இந்த நம்பிக்கையின் நெருக்கத்தைச் சடங்கு வழிபாட்டில் மிகுதியாகக் காணலாம். இது உணர்வுரீதியான பிணைப்பு. இதனை யாரும் வற்புறுத்தவோ வலிந்து இணைப்பதோ கிடையாது. சுய விருப்பத்தின் பெயரில் சடங்குகளில் பங்கேற்று ஆற்றுப்படுத்தி குணமடைகிறான். இக்குணமடைதல் என்பது உடல் உளம் சார்ந்ததாகும். இங்குச் சடங்காற்றும் பூசாரி அல்லது கப்புகன் என்பவர் தம்முள் ஒருவராகவும் அதேநேரம் அதிதிறன் வாய்ந்தவராகவும் அமானுட சக்திகளுடன் தொடர்புள்ளவராகவும் இருப்பார். இதுவே சடங்கிற்கான நம்பிக்கையையும் முழு பலத்தையும் அச்சமூகத்திற்குத் தருகிறது.

மனிதனின் முக்கிய ஆழ்மன ஆதங்கம் தன்னை வெளிப்படுத்தலாகும். இவ் வெளிப்படுத்தலுக்கான சரியான களமாக சடங்கும் சடங்கு கோயில்களும் காணப்படுகின்றன. பூசாரி தன்னை அங்குள்ளவர்களுள் சக்தி மிக்கவராக உணர்ந்து செயலாற்றி தன் உச்ச திறனை வெளிப்படுத்துவார். அங்குள்ள ஏனைய உதவி பூசாரிகள் தமது விடய அறிவினை வியக்கும்வகையில் வெளிப்படுத்துவார்கள் முறைப்படி பூசை நிகழ்த்தவும் மந்திரம், பாடல், உடுக்கடி, உருவேற்றுதல் போன்ற திறன்களை வெளிப்படுத்துவார்கள். தேவாதிகள் தம்மைத் தெய்வமாகவே உணர்ந்து தம் சக்தி எல்லாம் கூட்டி உடலை வருத்தி ஆடுவார்கள்.ஏனையோர் சடங்கு காரியங்களிலும் பூசை ஆயத்தங்களிலும் ஈடுபடுவார்கள்.

இவற்றைத் தொடர்ந்து மடை கொடுத்தல், கட்டுச் சொல்லுதல், மருந்து கொடுத்தல், சாட்டை பலி கொடுத்தல், தீ மிதித்தல், கும்மி, அம்மானை ஆட்டம், பலியாட்டம் போன்ற கலையம்சம் பொருந்திய செயற்பாடுகள் எல்லாவற்றிலும் ஈடுபடுவோர் தம்மையும் தமது திறன்களையும் வெளிப்படுத்த உகந்த இடமாகச் சடங்குகள் காணப்படுகின்றன. வருடம் ஒருமுறை கோயிலை அலங்கரித்து ஊரைத் தூய்மைப்படுத்தி, காவல் பண்ணி, கதவு திறந்து சடங்குகள் நடைபெற்று கதவு மூடும் வரை அவ் வருடத்திற்கு வேண்டிய பலம் அனைத்தையும் தம் திறன்களை வெளிப்படுத்துவதன் மூலம் பெற்றுவிடுவர்.

சடங்காச்சாரங்களில் பூசாரி அல்லது கப்புகன் என்பவர் பிரதான பங்கினை ஏற்பவர். தம்மிடையே வாழும் தம் இனக்குழு சார்ந்த ஒருவரைச் சடங்கு நிகழ்வின்போது அதி மானுட நிலைமையில் நோக்குதல் இங்குச் சிறப்புப் பெறுகின்றது. அவர் தெய்வத்துடன் நெருங்கிய ஒருவராகவும் சக்திமிக்க ஒருவராகவும் மக்களால் நம்பப்படுகிறார். பூசாரி அல்லது கப்புகள் என்னும் பதவிக்குச் சுலபமாக வந்துவிட முடியாது. அவர் பரம்பரை பரம்பரையாக சடங்குடன் தொடர்புடைய குடும்பத்திலிருந்து,

சிறுவயது முதல் சடங்குப் பண்பாட்டுக்கு ஊடாக வளர்ந்து வந்தவர் ஆகவும் தம் மூத்தவர்களிடம் சடங்கின் சகல நுட்ப விடயங்களையும் பற்றி முதற்கொண்டு கற்றுத் தெளிந்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் மந்திரங்களில் அறிவும் அதனைப் பிரயோகிக்கும் திறன் போன்றவற்றையும் வருடாவருடம் சடங்குகளில் வெளிப்படுத்தித் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவராகவும் உருவேற்றுதல், கட்டுதல், வெட்டுதல், கழித்தல் அதாவது துர்தேவதைகளை விலக்குதல் போன்ற நுண்மையான விடயங்களில் செயன்முறை தேர்ச்சியும் நம்பிக்கையும் உடையவராகவும் இத்தகுதிகளால் சமூகத்தால் அங்கீகாரம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். தெய்வங்களை வரவழைத்தல் முதல்கொண்டு வழி அனுப்புதல் வரையிலான மந்திரங்கள் சடங்குகளில் கைதேர்ந்தவர் ஆகவும் காவியம், சிந்து, பிரார்த்தனை முதலிய பாடல்களை உடுக்கடித்து உணர்வுபூர்வமாக பாடத் தெரிந்தவராகவும் இருப்பது மிக அவசியம். இத்தனை தகுதிகளும் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட தலைமைப் பூசகர் ஒருவர் உடுக்கின் பொருள் கேட்க அதன் பொருள் கூறி படிகடத்தல் என்னும் சடங்கின் பின்னரே ஒருவர் சடங்கு செய்ய தகுதியுடைய பூசாரி ஆகிறார்.

சடங்காற்றும் பூசாரி அல்லது கப்புகன் உள்ளூர் மருத்துவர் ஆவார். கோயிலில் கொடுக்கும் மருந்து, மூலிகை சேர்க்கையால் ஆனது. அதனைப் பருகிய நோயாளிகள் தமது நோய் நீங்கி விட்டதாக உணர்வர். இந்த மன திருப்தியும் உணர்வும் உளவியல்ரீதியான மாற்றத்தைக் கொடுத்து குணப்படுத்தி விடுகிறது.

உருக்கொண்டாடும் தெய்வம் பயன் படுத்தும் சொற்கள் சாதாரண பேச்சு வழக்கில் இருந்து மாறுபட்டு இருக்கும் பூமரம், குஞ்சானுகள், நாலுகால்பட்ட வாகனம், மண்டி மனை போன்ற சொற்கள் கேட்பவர்களுக்கு மேலும் நம்பிக்கை அளிக்கும். தெய்வம் கொடுக்கும் மருந்துகளை இவர்கள் உட்கொள்வார்கள். அது சில பரிகாரங்களை கூறும். சில மருந்துகளைச் சிபாரிசு செய்யும். கோயிலுக்கு தேவையான ஒன்றை நிறைவேற்றித் தருமாறு அல்லது வழங்குமாறு கேட்கும். இத்தனையும் கேட்டு உணர்ந்து தன் குறைகளைக் கொட்டித் தீர்த்து மனச் சமநிலை அடையும் குறித்த ஒருவர் புதிய உற்சாகத்துடன் வெளியேறுகிறார். உளரீதியான சிக்கலிலிருந்து விடுபட்டுப் பரிகாரங்கள் செய்ய தொடங்கி முற்றாக அதிலிருந்து விடுபடுவார்.

சடங்குகளின் தத்துவம் உடல் உள சுகாதாரமாகும். பில்லி சூனியம் ஏவல் போன்றதுஷ்டதேவதைகளால்பீடிக்கப்பட்ட நோயாளிகள் பலர் கோயிலில் உடுக்கு பறை ஒலி கேட்டவுடன் தலைசுற்றி ஆடத் தொடங்குவார்கள். அப்போது பூசாரி அங்கு அவருக்கு உடுக்கடித்துக் காவியம் பாடி ஆட்டுவித்து நீ யார் என்று கேட்பார். சில தேவதைகள் பெயரை சொல்ல தயங்கும். இலகுவில் சொல்லிவிடாது. அப்போது பூசாரி கண்டிப்பாக அதனுடன் உரையாடி அதனைமேலும்உடுக்குஅடித்துஆட்டுவித்து அதன் உடல் மொழியிலிருந்து இறுதியில் கண்டறிவார். பின் பூசாரிக்கும் தேதிக்கும் இடையில் உரையாடல் நடைபெறும். உனக்கான படையலைத் தருவேன் குறித்த பூ மரத்தை அதாவது தேவதை ஏறப்பட்ட வரை விட்டு அகன்று விடு எனச் சொல்ல தனக்குரிய படையலையும் அதில் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும் என்பதையும் அது கேட்கும். பின்னர் கழிப்பு செய்யும் நாளைத் தீர்மானித்து சத்தியவாக்கு கொடுத்து செல்லும். இத்தனையும் ஏவப்பட்ட ஒருவரின் உணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் நடைபெறும். நடைபெற்ற சம்பவத்தை அவரால் அறிந்துகொள்ள

முடிவதில்லை. பின்னர் உரிய முறையில் கழிப்பு செய்து அதனை அகற்றி விடுவார்கள். இங்கு மனித சக்திக்கு அப்பாற்பட்ட அமானுஷ்ய காரியங்கள் நடைபெறுவதை அவதானிக்கலாம். நோயாளி மீண்டும் ஒரு புதிய மனிதனாக இயல்பான நடத்தையுடைய ஒருவராக மாறி சமூகத்துடன் இணைந்து கொள்வார்.

உடுக்கொலி மிகவும் சக்தி வாய்ந்தது. அதனுடன் சேர்ந்து காவியங்கள், தாலாட்டு போன்றவை பாடும்போது கேட்போருக்கு அதன் அதிர்வுகள் உளரீதியான மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. ஊர்மக்களும் காவியங்கள், கும்மிப்பாடல்கள், உலா பாடல்கள் என்பவற்றைப் பாட உடுக்கு, பறை, சொர்ணாளி, சிலம்பு போன்ற வாத்தியங்களை வாசித்துக் கொண்டு செல்ல தெய்வங்கள் முன்னே உருக்கொண்டு கும்மியடித்து கூய் போட்டு துள்ளி ஆடி மக்களோடு மக்களுக்காக ஊர்காவல் பண்ணி வருவர். இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் ஊர் மக்கள் மகிழ்வுடன், தெய்வம் நம் ஊரை வலம் வந்துகாத்து நிற்கின்றது, இனி ஒரு குறையும் நம் ஊருக்கு வாராது என மனப்பூர்வமாக நம்புகின்றனர்.இந்நம்பிக்கை அவர்களுக்கு உளவள சிகிச்சையாகும். சடங்கினை ஆடல் பாடல்களில் இருந்து பிரித்தறிய முடியாதவாறு இரண்டும் இணைந்தே செயலாற்றுகின்றன.

கோயில்களின் முன் காவடி எடுப்போர், முள் ஏற்றும்போது தன் முதுகை மேற்புறம் காட்டி படுத்திருக்க உரத்த தொனியில் காவடிச்சிந்து, காவியம் என்பவற்றை உடுக்கு அடித்துப்பாடுவர்.முள் ஏற்றப்படுவோன் இயல்பான உணர்வு நிலையிலிருந்து சன்னதம் கொள்வார். ஆடலுக்கு தகுந்தபடி உடுக்கு, பறை, தவில் என்பவற்றை வாசிக்க உச்சநிலையில் சன்னதம் கொண்டு எழுந்து ஆடுவார். இங்கு உடல் வலியை உணர முடிவதில்லை. பாடல்கள் அவரது முட்கள் அகற்றப்படும் வரை தொடர்கிறது. இங்கு காவடி நேர்த்திக்கடன் ஆகவே செய்யப்படுவதை அவதானிக்கலாம்.

சடங்குகளில் தீ மிதித்தல் பிரதான அம்சமாகும். இப்பலிச் சடங்கு எல்லா சடங்கு கோயில்களிலும் நடைபெறுவதில்லை. பாதங்களில் உள்ள உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் நரம்பு முடிச்சுக்களைத் தூண்டுவதற்காக இச்சடங்குகளை பண்டைக் காலத்திலிருந்து செய்து வருவதாகச் சில மருத்துவர்கள் கூறுகின்றனர். இன்றும் சில மருத்துவ முறைகளில் நமது உடலின் ஒவ்வொரு பகுதிக்குமான தூண்டற் புள்ளி பாதங்களில் இருப்பதாக கூறுகின்றனர். தீக்குழியில் இறங்குவதற்கு முன்னர் பறையொலி பாட்டொலியுடன் தேவாதிகள் வரிசையாக நிற்பர். பின் தலைமை தெய்வம் தீயில் இறங்கி நடக்க தெய்வங்கள் தீயில் இறங்கி நடக்க அரோகரா ஓசையுடன் ஒவ்வொருவராக இறங்கி நடப்பர். இங்கு தீயிலிருந்து வெளியேறும் ஒருவன் தன்னை புதிய மனிதனாக உணர்கிறான். தன் பாவம், பிணிகள் எல்லாம் தீயிலே கருகி தான் ஒரு புதிய மனிதனாக புத்துணர்ச்சியுடன் வெளியேறுவதாக உணரும் இந்த மனநிலை விவரிக்கமுடியாத ஆனந்தமாக இருப்பதாக கூறுகின்றார்கள். இது மிகப்பெரிய உளநல, உடல் நல சிகிச்சையாகும்.

சடங்கில் பாடப்படும் இசை மிக எளிமையாக இருக்கும். ஒரே இசை மெட்டு திரும்பத் திரும்ப வருவதுடன் ஒரே ஸ்வரஸ்தானங்கள் மீளமீள ஒலிப்பதை அவதானிக்கலாம் மனது லயப்படுவதற்காக ஒலிக்கும் மந்திரங்கள் அடிப்படையில் மூன்று ஸ்வரங்களையே கொண்டன. அவை ஸ,ரி,நீ என்பவையாகும். குறைந்தளவு ஒலிவேறுபாடுகள் மீளமீள ஒலிக்கும் போதும் இலகுவில் மனம் லயித்து விடும். ராக ஆலாபனை ஸ்வர விஸ்தாரங்கள் என்பவை அழகு உணர்வையும் திறனையும், ரசனையையும் கொடுக்குமே அல்லாமல் மன ஒன்றிப்பிற்கும் இயைதலுக்கும்

அப்பாற்பட்டு நிற்கும். எனவே தான் மந்திரங்கள், பிரார்த்தனைகள், மன்றாட்டுக்கள், அகவல்கள் போன்ற இறை இசை வடிவங்கள் சொற்ப சுரங்களில் மீளமீள ஒலிக்கும் தன்மை உடையன. சடங்குப் பாடல்களில் உள்ள இத் தனித்துவமான தன்மையும் கூடவே வாசிக்கும் உடுக்கு, பறை, சிலம்பு போன்ற வாத்திய ஒலிகளும் கேட்கும்போதும் உச்ச பயன்பாட்டை தந்து சடங்கில் ஆடும் தேவாதிகள் முதற்கொண்டு கூடியிருக்கும் மக்கள் வரை ஒரே நேர் கோட்டில் பயணிக்க வைக்கிறது. அந்த உணர்ச்சிகரமான சூழலை நேரடியாக அனுபவிக்கும்போதே அதன் பெறுமானம் அளப்பரியதாக தோன்றுகிறது.

சடங்கு பாடல்களில் வரும் சொல்லாடல்கள் முக்கியமானவை. தெய்வத்தை வர்ணித்து பாடும் பாடல்களில் அதன் அழகிற்கு உவமைப்படுத்தும் சொற்கள் அற்புதமாக இருக்கும். தெய்வத்தின் வீரத்தைக் கூறும்போது அதன் பராக்கிரமங்களையும், அகோரத்தைக் கூறும்போதும் அதன் பயங்கரத் தோற்றம், செயல்கள் என்பவை குறிப்பிடப்படுவதைக் கேட்கும்போதும் அத்தெய்வத்தின் முழு உருவம் மனக் கண்முன் தெரியும். இவ்அனுபவம் மேலும் பயபக்தியோட கூடிய இறை நம்பிக்கையை ஊட்டுவதாக இருக்கும். சிலர் பாடல்களைக் கேட்டுக் கை கூப்பி கண்ணீர் விட்டு அழுவதையும் அவதானிக்க முடிந்தது. தெய்வத்தை அழைக்கும்போது அம்மா வாவேனம்மா, தாயாரே வாருமம்மா என்று இரங்கி பாடுதைக் கேட்போர் தாமும் உள்ளார இரங்கி அழைப்பர். தெய்வத் தினை உரு ஏற்றும்போது பாடப்படும் பாடல்களில் வாருமம்மா வாருமம்மா என பல தடவைகள் இரங்குவது போல் அழைக்க அவர் சன்னதம் கொள்வார். இவையெல்லாம் சடங்குப் பாடல்களில் தனித்தன்மைகள் ஆகும்.

சடங்கானது உள்ளூர் மக்களின் ஒரு வருடத்திற்கான முழு சக்தியையும் பலத்தையும் வழங்கி தம்மை தமது தெய்வங்கள் அடுத்த வருட சடங்கு வரை ஒரு குறையும் இல்லாமல் காத்திருக்கும் என்ற அசையாத நம்பிக்கையும் அளிக்கின்றது. பிற்காலத்தில் எழுந்த காலனித்துவ சிந்தனைகளும் ஆரிய பிராமண செல்வாக்கும் சடங்குகளை இழிவாகப் பார்க்கத் தூண்டின. இவற்றை நாகரிககற்ற செயல் என உள்ளூர் மேல்நிலையாக்க சிந்தனாவாதிகளும் பிற கலாச்சார மோகம் கொண்டவர்களும் இதனை ஆமோதித்து வழிமொழிந்தனர். இவ்வாறான சில தலையீடுகளும் மாற்றங்களும் ஏற்பட்டாலும் மட்டக்களப்பு தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சடங்கின் செல்வாக்கும் மக்கள் நம்பிக்கையும் இன்றுவரை குறைவுபடாமல் வருடா வருடம் மிகக் கோலாகலமாக சடங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை இம்மக்களின் உடல் உள சிக்கல்களை தீர்த்துக்கொள்ளும் ஒரு சிகிச்சைக் களமாகவும் பலமாகவும் இருப்பது அவதானிக்கப்பட்டது. தற்போது மட்டக்களப்பில் சடங்கினை வெறும் அரங்காகப் பார்க்கும் பார்வையை விடுத்து சமுக மானிடவியலாளர்களும் ஆய்வாளர்களும் கல்வியியலாளர்களும் சடங்கினுடைய சிகிச்சை தன்மை, ஆற்றுகை தன்மை, அதன் வழிப்படுத்தல், ஆற்றுப்படுத்தல் போன்ற தன்மைகள் பற்றி ஆய்ந்து அறிந்து சாதகமான கருத்துக்களைக் குறிப்பிட்டு வருவதனால் மட்டக்களப்பு தமிழக மக்களின் சடங்கு வழிபாடுகள் பற்றிய அசையாத நம்பிக்கைக்கு இவை புது வெளிச்சத்தைப் பாய்ச்சுவதுடன் இவ் ஆடல் பாடல்கள் கலந்த தனித்துவமான வழிபாடுகள் இன்றுவரை தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆற்றப்படும் சடங்கு வழிபாடானது அம்மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. இக்கட்டுரை ஆய்வாளர் இப்பிரதேசத்தை பூர்வீகமாகக்கொண்டு வாழ்பவர் என்ற ரீதியிலும் இச்சடங்காற்றுகைகளுடன் நேரடித் தொடர்புடையவர் என்ற ரீதியிலும் பெறப்பட்ட தகவல்கள் பெரும்பாலும் களப்பணியில் தொகுக்கப்பட்டுச் சடங்குப் பாடல்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டவையாகும். இவ்ஆய்வில் இப்பிரதேச மக்களின் வாழ்வியலுடன் அவர்களின் வாழ்க்கைக்கான நெறிமுறைகளையும் கருத்துக்களையும் உடலுள ஆற்றுப்படுத்தல் சிகிச்சையினையும் மேம்படுத்த சடங்குகளும் சடங்குப்பாடல்களும் எவ்வாறு பங்களிப்புச் செய்து இன்றுவரை இப்பிரதேசத்தில் நின்று நிலைபெற வழிவகுத்துள்ளதைக் கண்கூடாகக் காணலாம்.

## துணை நின்ற நூல்கள்

1. கணபதிப்பிள்ளை. சி, மகாமாரித்தேவி திவ்வியகரணி, 1971.
2. தில்லைநாதன். சா, மட்டக்கப்பில் இந்து சமய கலாசாரம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 2006
3. தில்லைநாதன். சா., மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு,2015.
4. மகேஸவ்ரலிங்கம். க, மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், தில்லை வெளியடூ, மகிழடித்தீவு, 1996, முதலாம் பதிப்பு.
5. மகேஸவ்ரலிங்கம். க, மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு, 2008.
6. கௌரீஸ்வரன், விரிவுரையாளர், நுண்கலைத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு, (வயது - 42), நேர்காணல்: 21.07. 2020.
7. சந்திரகுமார். சு, சிரேட விரிவுரையாளர் நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக் கழகம், வந்தாறு மூலை, (வயது-45), நேர்காணல்: 21.07. 2020